அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 21/2006

எனது இல: தா/4/3/1/14 – 1
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு . 07

2006 திசம்பர் 06 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் , அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள் யாவர்க்கும்.

**அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் தற்காலிக, அமய, ஒப்பந்த அடிப்படையின் பேரில், ஆட்சேர்ப்புச் செய்த ஊழியர்களை நிரந்தரமாக்குதல்.**

அரச நிறுவனங்கள் , கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் 2005.12.31 ஆம் திகதி வரை நடைமுறைப்பட்ட ஊழியர் வகுப்பீட்டின் படி கனிஷ்ட ஊழியர் தரங்களாக கருதப்பட்ட பதவிகளுக்காக தற்காலிக, அமய அத்துடன் ஒப்பந்த அடிப்படையில், ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்கள் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் 2006.11.01 ஆம் திகதி முதல் சேவையில் நிரந்தரப்படுத்த வேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது.

I. அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியில் வெற்றிடங்கள் இருத்தல் வேண்டும்.

II. அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரிய தற்போது வெற்றிடமாகி உள்ள நிரந்தர பதவியில் 2006.11.01 ஆந் திகதிக்கு (வேலை செய்யும் ) 180 நாட்கள் திருப்திகரமாகவும் தொடர்ந்தும் சேவையாற்றி இருத்தல் வேண்டும். அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் பொது விடுமுறை தினங்களில் சேவையாற்ற வேண்டிய பதவியொன்றில் பணியாற்றும் அலுவலரொருவர் அந் நாள்களில் சேவையாற்றிய நாள்கள் 180 நாள்களை கணக்கிடும் போது ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

III. பதவிக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. 2002.10.01 மற்றும் 2002.10.24 ஆந் திகதிய முகாமைச் சேவைகள் சுற்றறிக்கை 16 மற்றும் 16 (1) வெளியிடப்பட்டதன் பின் மேற்படி அடிப்படையின் பேரில் செய்யப்பட்ட நியமனம் ஆயின் அதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முறைசார் அனுமதியை பெற்றிருத்தல் வேண்டும்.

V, இதன் கீழ் நிரந்தரப்படுத்துவதற்கு தகைமை பெறுகின்ற ஊழியர்கள் 2006.11.01 ஆந் திகதிக்கு 45 வயதை கடந்திருப்பினும் அவர்களை தற்காலிக, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படையின் பேரில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் 45 வயதை கடந்திருக்காவிட்டால் அவர்களை சேவையில் நிரந்தரப்படுத்த முடியும்.

02. மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்யும் சகல அலுவலர்களையும் நிரந்தர சேவைக்கு நியமனம் செய்வதற்காக உரிய நியமன அதிகாரி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

03. இச் சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/ டி. திசாநாயக்க,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மைச்சு